DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C No. 353/2022 |
| Session | ... | |
| | | Prosecution / PW-2 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திரு.ரெத்தினம் |
| Father's Name (or) | | |
| Husband Name | : | த/பெ.முனியாண்டி |
| Village | : | கடம்பனேந்தல் |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(A1 died. A2, A3 are absent U/s.317 Cr.P.C petition filed heard and allowed.)

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 08.12.2023

---

**முதல் விசாரணை**

1. நான் கடம்பனேந்தலில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். எனக்கு இரண்டு பெண் பிள்ளைகளும், ஒரு மகனும் உள்ளனர். எதிரிகளை தெரியும். எங்களுக்கும் எதிரிகள் குடும்பத்தாருக்கும் ஏற்கனவே

நடைபாதை பிரச்சனை உள்ளது. அது சம்பந்தமாக வழக்கு நடந்து கொண்டிருக்கிறது.

2. சுமார் 5 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் அந்த நடைபாதையில் எதிரிகள் அவர்களது இருசக்கர வாகனத்தை கடந்து செல்ல முடியாத அளவிற்கு நிறுத்தி வைத்திருந்தார்கள் அதைபற்றி நானும் எனது மகனும், எனது மனைவியும் எங்கள் வீட்டில் பேசிக்கொண்டிருந்தோம்.

3. அப்போது மாலை 05.00 மணியிருக்கும் அப்போது கண்ணன் மற்றும் அவரது மகன் ஈஸ்வரன் ஆகியோர்கள் நான் கம்மாகரைக்கு குளிக்க சென்றபோது என்னை அசிங்க அசிங்கமாக பேசினார்கள். ஏன்பா ஊருக்கு கட்டுப்படவில்லை எதற்கு இப்படி பிரச்சனை செய்கிறீர்கள் என்று கேட்டதற்கு 1, 2 எதிரிகள் சேர்ந்து என்னை அடித்து கண்மாய்க்குள் தூக்கி போட்டுவிட்டார்கள்.

4. சத்தம் கேட்டு எனது மகன், எனது மனைவி ஓடி வந்தார்கள். 1, 2 எதிரிகள் எனது மனைவி மற்றும் மகனையும் ஈஸ்வரன் கம்பியாலும், கண்ணன் கட்டையாலும் அடித்ததில் எனது மனைவிக்கு இடுப்பு எலும்பு முறிந்துவிட்டது. பின்னர் செல்லம் மற்றும் மாரிமுத்து ஆகியோர்கள் விலக்கிவிட்டார்கள்.

5. பின்னர் ஆட்டோவில் நான் தொண்டி காவல் நிலையம் சென்றேன் போலிசார்கள் மருத்துவமனை செல்லுமாறு அறிவுறு்தியதன்பேரில் திருவாடானை அரசு மருத்துவமனைக்கு நாங்கள்மூவரும வந்தோம். பின்னர் மேல்சிகிச்சைக்காக இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம்.

6. தொண்டி காவல் நிலைய போலிசார் இராமநாதபுரம் அரசு

மருத்துவமனையில் வைத்து எனது மனைவி புகார் வாக்குமூலம் கொடுத்தார். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. எனது சொந்த ஊர் திருப்புனவாசல் கூடலூர் ஆகும். அ.சா.1 எனது மனைவி ஆவார். கடம்பனேந்தல் கிராமத்தில் ரோடு போட்டுள்ளார்களா என்றால் இல்லை. எங்கள் வீடு தெற்கு பார்த்த வாசல் என்றால் சரிதான்.

2. எதிரிகள் வீடு வடக்கு பார்த்த வாசல் என்றால் சரிதான். எதிரி வீட்டின் மேற்கில் ராமு வீடு உள்ளது என்றால் சரிதான். எங்கள் வீட்டின் மேற்கே பொன்னழகு வீடு உள்ளது என்றால் சரிதான்.

3. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் எந்த திசையில் உள்ளது என்றால் எங்கள் வீட்டிற்கு மேற்கே உள்ளது. பாதை சம்பந்தமாக எந்த நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ,இராமநாதபுரம் கலெக்டர் ஆபிசில் கொடுத்துள்ளோம்.

4. அதன்பிறகு அங்கிருந்து கல்கால்களை ஊன்றி முடித்து வந்தவுடன் எதிரிகள் கல்களை பிடுங்கி எறிந்துவிட்டார்கள் இந்த விசயத்தை போலிசார் விசாரணையில் சொல்லவில்லை. எதிரிகள் என்னை தள்ளியபோது எனது மனைவி மற்றும் மகன் வீட்டில் தான் இருந்தார்கள் என்றால் சரிதான்.

5. எதிரிகள் என்னை தாக்கி கண்மாய்க்குள் என்னை அடித்து துாக்கி எறிந்து விட்டார்கள். என்னை மருத்துவமனைக்கு யார் அழைத்து சென்றார்கள் என்றால் நாங்கள் மூன்று பேரும் தான் ஆட்டோவில் சென்றோம் யாரும் அழைத்துச் செல்லவில்லை.

6. எத்தனை மணிக்கு திருவாடானை அரசு மருத்துவமனைக்கு வந்தோம் என்றால் சுமார் 06.00 மணிக்க போனோம். தொண்டி போலிசார் எங்களை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள்.

7. 1வது எதிரி எனது மனைவி மீது புகார் அளித்துள்ளாரா என்றால் நிறைய முறை கொடுத்துள்ளார். 3வது எதிரி எனது மீதும் எனது மனைவி மீதும் புகார் அளித்துள்ளார் என்றால் சரிதான்.

8. எதிரிகள் கண்மாய்கரைக்கு செல்லவும், மெயின்ரோட்டுக்கு செல்லவும் எங்கள் வீட்டு பக்கமாக தான் வந்து செல்ல வேண்டும் என்றால் எங்கள் வீட்டு பக்கமாக தான் வந்து செல்ல வேண்டும் என்ற அவசியமில்லை.

9. எனது மனைவி சம்பவம் பற்றி புகார்வாக்குமூலம் அளித்தார். நான் அருகில் இருந்தேன். தொண்டி ஏட்டு அய்யா வந்து விசாரித்தார்கள். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியிலேயே காவல் நிலையத்தில் புகார் அளித்துவிட்டோம்.

10. எங்கள் வீட்டிற்கும் தனகோபால் வீட்டிற்கும் பிரச்சனை உள்ளது என்றால் தற்போது ராசியாகிவிட்டோம். ராசி, செல்லம்மாள் வீட்டிற்கும் பிரச்சனை உள்ளது என்றால் தற்போது ராசியாகிவிட்டோம்.

11. ரத்தினம் என்பவர் எங்கள் குடும்பத்தின்மீது புகார் அளித்துள்ளார் என்றால் சரிதான். மலைராஜ் வீட்டோடும் எங்களுக்கு பிரச்சனை உள்ளது என்றால் அதுவேறு பிரச்சனை எங்களுக்கும் அவர்களுக்கும் நேரடியாக எந்த பிரச்சனையும் இல்லை.

12. அ.சா.1 எங்கள் ஊரில் உள்ள அனைவரிடமும் பிரச்சனை செய்வார்

என்றும் அ.சா.1ன் பேச்சை கேட்கவில்லை என்றால் மற்றவர்கள் மீது பொய் வழக்கு தாக்கல் செய்வது வழக்கம் என்றும் அந்த வகையில்போடப்பட்டது தான் இந்த வழக்கு என்று சொன்னாலும் அ.சா.1 எனது மனைவி என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

13. நானும் அ.சா.1ம் சைக்கிளில் சென்று கீழே விழுந்து காயத்தை ஏற்படுத்திக்கொண்டு 1வது எதிரி கொடுத்த புகாரை மனதில் வைத்துக்கொண்டு எதிரிகளை பழிவாங்க வேண்டும் என்ற நோக்கில் இந்த புகாரை அளித்துள்ளார் என்றால் சரியல்ல.

14. நான் சொன்னதுபோல, சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றாலும் ஏற்கனவே எங்களுக்கும் எதிரிகளுக்கும் உள்ள முன்விரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு எதிரிகள் மீது அ.சா.1 பொய் புகார் அளித்து அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C No. 353/2022 |
| Session | ... | |
| | | Prosecution / PW-3 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திரு.திருமூர்த்தி |
| Father's Name (or) | | |
| Husband Name | : | த/பெ.ரெத்தினம் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(A1 died. A2, A3 are absent U/s.317 Cr.P.C petition filed heard and allowed.)

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 08.12.2023

---

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் கடம்பனேந்தலில் வசித்து வருகிறேன். நான் சென்னையில் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது அம்மா ஆவார். அ.சா.,2 எனது அப்பா ஆவார். எதிரிகளை எனக்கு தெரியும்.

2. 11.06.2018ம் தேதி நான் ஊரில் இருந்து வந்திருந்தேன். எதிரிகள் அவர்களக்கு சொந்தமான இருசக்கர வாகனங்களை எங்கள் வீட்டிற்கு செல்லும் பாதையில் நிறுத்தி வைத்திருந்தார்கள். நான் வந்து எனது அம்மாவிடம் சொன்னேன்

3. ஏற்கனவே எங்கள் குடும்பத்திற்கும் எதிரிகள் குடும்பத்திற்கும் பாதை சம்பந்தமான பிரச்சனை இருந்து வந்ததால் எனது அம்மா அதை பற்றி ஒன்றும் சொல்லவில்லை. நீ வேறு பாதை வழியாக வந்து செல் என்று கூறினார். பிரச்சனை செய்ய வேண்டாம் என்று கூறினார்.

4. எனது அப்பா மாரியம்மன் கோவில் பின்புறம் பொது இடத்திற்கு சென்றபோது ஈஸ்வரன் எனது அப்பாவை பார்த்து நோத்தாள ஓக்க, ஒம்மாள ஓக்க வாடா உன்னை அடிக்கிறேன் என்று சொன்னார். அதற்கு அப்பா ஊரிலும் சொல்லியாச்சி, காவல் நிலையத்திலும் சொல்லியாச்சி ஏன் இப்படி செய்கீறீர்கள் என்று கேட்டதற்கு எதிரிகள் எனது அப்பாவை அடித்து கண்மாயில் துாக்கி போட்டார்கள். அப்பவே நான் விலக்க வந்தபோது என்னையும் எனது அம்மா வந்தபோது வாடி தேவிடியா உன்னை தாண்டி தேடிட்டு இருந்தேன் என்று சொல்லி அங்கிருந்த கட்டை, கம்பியை எடுத்து என்னையும் எனது அம்மாவையும் எதிரிகள் இருவரும் அடித்தார்கள்.

5. எதிரி சகுந்தலா என்னை பார்த்து இந்த தேவிடியா பயனை அடித்து விடுங்கடா அப்பதான் நம்ம நல்லா இருக்கலாம் என்ற திட்டினார்கள். எனது அம்மாவை எதிரி ஈஸ்வரனும், சகுந்தலாவும் செருப்பக்காலல் ஏறி கழுத்தில் ஏறி மிதித்தார்.

6. எனது அம்மாவிற்கு எதிரிகள் அடித்ததில் எனது அம்மாவிற்கு இடுப்பு உடைந்துவிட்டது. பின்னர் ஆட்டோ வரச்சொல்லி தொண்டி காவல்

நிலையத்திற்கு சென்றபோது மருத்தவமனைக்கு போக சொன்னார்கள் நாங்கள் தொண்டி மருத்துவமனைக்கு சென்றோம் அங்கு எங்களை திருவாடானைக்கு போக சொன்னார்கள்.

7. பின்னர் திருவாடானை மருத்துவமனைக்கு சென்றபோது அங்கு உள்ளவர்கள் சொன்னதன்பேரில் ஆம்புலன்ஸ் மூலம் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு போய் சேர்த்தார்கள். மேற்படி மருத்துவமனையில் எனது அம்மா மூன்று நான்கு நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார்கள். அதன்பிறகு மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள்.

8. தொண்டி போலிசார் இராமநாதபுரம் மருத்தவமனைக்கு வந்து எனது அம்மாவை விசாரித்து புகார்வாக்கு்முலம் பதிவு செய்தார்கள். பின்னர் போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நான் தற்போது முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளை தான் போலிசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். எனது அப்பாவை எதிரிகள் அடித்தாக சொல்லும்போது நானும் எனது அம்மாவும் வீட்டில் இருந்தோம் என்றால் சரிதான்.

2. எங்கள் வீடு தெற்கு பார்த்த வாசல் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் தென்மேற்கு திசை என்றால் சரிதான். எங்கள் வீட்டு பின்னாடி எதிரிகள் வீடு உள்ளது என்றால் சரிதான். எதிரிகளின் வீட்டுக்கு மேற்கு ராமு வீடு உள்ளது என்றால் சரிதான்

3. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும்போது நான் தான் முதலில் சென்று விலக்கினேன். எதிரி ஈஸ்வரன் வயிற்றில் ஆப்ரேசன் செய்து இருந்தார்

என்றால் சரிதான். எனது அம்மாவை யார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள் என்றால் நான், எனது அப்பா, அம்மா, மாரிமுத்து, செல்லம் ஆகியோர்கள் ஆட்டோவில் அழைத்துச் சென்றோம்

4. 3 வது எதிரி எனது அம்மா, அப்பா மற்றும் சுந்தரி ஆகியோர்கள் மீது புகார் அளித்துள்ளார் என்றால் அதுபற்றி தெரியாது. 1 வது எதிரி கனகராஜ் அ.சா.1 மீது ஏற்கனவே புகார் அளித்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

5. எங்கள் வீட்டிற்கும் தனகோபல் வீட்டிற்கும் பிரச்சனை உண்டா என்றால் இல்லை. இரத்தினம் என்பருக்கும் எங்களுக்கும் பிரச்சனை உள்ளது என்றால் உள்ளது.

6. நான் சொன்னதுபோல, சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றாலும் என்னையும் எனது அம்மாவையும், எனது அப்பாவையும் எதிரிகள் கட்டையாலோ, கம்பியாலே அடிக்கவில்லை என்றால் சரியல்ல.

7. நான் முதல் விசாரைணயில் சொன்னதுபோல எதிரிகள் மூவரும் அசிங்கமான வார்த்தைகளால் பேசவில்லை என்றால் சரியல்ல. எனது அம்மா ஊரில் உள்ளவரிகளிடம் பிரச்சனை செய்து பஞ்சாயத்து செய்யும்போது எனது அம்மா பேச்சை கேட்கவில்லை என்றால் மற்றவர்கள் மீது பொய் வழக்கு தாக்கல் செய்வது எங்கள் குடும்பத்திற்கு வழக்கம் என்றால் சரியல்ல

8. எனது அம்மாவும், அப்பாவும் சைக்கிளில் சென்று விழுந்து தன்னிச்சையான காயத்தை ஏற்படுத்திக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. எதிரி கனகராஜ் எனது அம்மா மீது கொடுத்த புகாரை மனதில் வைத்துக்கொண்டு இந்த எதிரிகளை பழிவாங்க வேண்டும் என்ற நோக்கத்தில் பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல

9. அ.சா.1, .அ.சா.2 ஆகியோர்கள் எனது பெற்றோர்கள் என்பதால் எதிரிகளுக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல

10. எனது அப்பா மாரியம்மன் கோவில் பின்புறம் பொது இடத்திற்கு சென்றபோது ஈஸ்வரன் எனது அப்பாவை பார்த்து நோத்தாள ஓக்க, ஓம்மாள ஓக்க வாடா உன்னை அடிக்கிறேன் என்று சொன்னார். அதற்கு அப்பா ஊரிலும் சொல்லியாச்சி, காவல் நிலையத்திலும் சொல்லியாச்சி ஏன் இப்படி செய்கீறீர்கள் என்ற விவரத்தை போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன்.

11. என்னை எந்த தேதியில் எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்றால் தேதி நினைவில் இல்லை சுமார் ஐந்து வருடத்திற்கு முன்பு விசாரித்தார்கள். நான் எதிரிகள் மீது ஏதும் தனியாக புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான். என்னை இராமநாதபுரம் மருத்தவமனையில் வைத்து தலைமை காவலர் விசாரித்தார். வீட்டில் சார்பு ஆய்வாளர் மற்றும் காவலர்கள் வந்து விசாரித்தார்கள். எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல

12. என்னை போலிசார் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.